பலியிடப்பட்டிருக்கிறார்கள். இயற்கையின் கொடுமையான, ஆவேசமான தாக்குதலின் காரணமாகப் பல லட்சக் கணக்கான மக்களை இழந்த கிழக்குப் பாகிஸ்தான், போரின் விளைவாக இலட்சக் கணக்கானவர்களை இழந்து கொண்டிருக்கிறது. ரஹ்மான் குடும்பம் தவித்துக் கொண்டிருக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்படித் தங்களுடைய உரிமைகளுக்காக பொது மக்கள் அளித்த தீர்ப்பை அங்கீகரிக்க வேண்டுமென்று எழுப்பிய கோஷத்திற்காக அந்த நாட்டு மக்கள், அந்த நாட்டு மக்களை வழி நடத்திச் செல்லும் தலைவர்கள் பழி வாங்கப்படும் பரிதாபகரமான காட்சி அகில உலகத்தையும் திடுக்கிட வைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் ஒரு தீர்மானத்தை பாராளுமன்றத்தில் இந்தியாவின் தலைமையமைச்சர் கொண்டு வந்து ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறார்கள். கேரள சட்டமன்றத்திலும், அஸ்ஸாம் போன்ற வேறு பல சட்டமன்றங்களிலும் இரங்கலைத் தெரிவிக்கும் வகையிலும், கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்குத் தங்களுடைய ஆதரவு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டும் வகையிலும் கருத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய தமிழ்நாடு சட்ட மன்றத்தில் இந்தத் தீர்மானத்தை நான் முன் வைத்திருக்கிறேன். தாங்கள் குறிப்பிட்டது போல் அனைத்துக் கட்சித் தலைவர்களிடத்திலும் பேசியதற்கிணங்க எல்லாக் கட்சியினரும் ஒருசேர இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வங்க தேசத்தில், கிழக்குப் பாகிஸ்தானத்தில் அல்லலுறும் மக்களுக்கும், உயிரை விட்டுக் கொண்டிருக்கும் லட்சோப லட்சம் மக்கள் குடும்பத்திற்கும் மற்றும் அனைவருக்கும் நான்கு கோடி தமிழ் மக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு நம்முடைய நல்லெண்ணம் அவர்கள்பால் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளும் வகையில் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னுரைத்த இந்தத் தீர்மானத்தோடு பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய உணர்வுகளையும் நான் இணைக்கிறேன். இந்தத் தீர்மானத்தை அவை ஒருமனதாக ஏற்றுக் கொள்ளுவதாகக் கருதுகிறேன்.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(2) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) மதிப்பீட்டுக் குழுவில் சட்ட மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, "1971-72-ம் ஆண்டுக்கான சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சேர்த்துக் கொள்வதற்கென ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்து அவ்வாறு நியமனம் செய்த உறுப்பினர்களின் பெயர்களை, பேரவைக்கு அறிவிக்குமாறு இப்பேரவை சட்ட மேலவைக்குப் பரிந்துரை செய்கிறது" என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS